අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

| | | |
|---|---|---|
| මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/96/07/1 | මගේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2025.08. 15 |

அனைத்து மாகாணச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்,
அனைத்து பிரிவெனாதிபதிகள்,
அனைத்துப் பாடசாலை அதிபர்கள்

**<u>தேசிய வாசிப்பு மாதம், பாடசாலை நூலக வாரம் மற்றும் பாடசாலை நூலக தின நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.- 2025</u>**

ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய 2025 ஒக்டோபர் மாதம் இடம்பெறும் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் வழிகாட்டல்களை வழங்குவதற்காக இவ் ஆலோசனைகள் வெளியிடப்படுவதுடன், பாடசாலை மாணவர்களது வாசிப்பை மேம்படுத்துவது இதன் பிரதானமான குறிக்கோளாகும்.

### 01. தேசிய வாசிப்பு மாதத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களின் ஒழுங்குவரிசை

நூல்கள் உட்பட முக்கியமான வாசிப்புச் சாதனங்களைத் தெரிவு செய்து வாசிப்பதனூடாக சமநிலையான ஆளுமையுடன் கூடிய உணர் திறன் மிக்க சிறுவர் சந்ததியினரை உருவாக்குவதற்காக சகலருக்கும் வாசிப்பினை வாழ்நாள் பழக்கமொன்றாக மாற்றும் குறிக்கோளுடன் இந் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றைப் பாடசாலைக்கு பொருந்தக்கூடிய வகையில் தயாரித்து நடைமுறைப்படுத்துவது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும். இதற்காக நிதி சேகரித்தல் மற்றும் மாணவர்கள் அல்லது பெற்றோருக்கு பொருளாதார ரீதியில் கஷ்டத்தை ஏற்படுத்தாதிருக்க வேண்டும். அத்துடன் பாடசாலையில் உள்ள அல்லது பாடசாலைக்கு கிடைக்கப் பெறும் வளங்களை தேவையான வகையில் பயன்படுத்தி இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இதன் போது கீழ்வரும் துறைகள் சார்ந்து கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

1.1 பாடசாலை மாணவர்களது வாசிப்புத் தேவைகளை இனங்காணல் மற்றும் அதற்கு அவசியமான வசதியளித்தல்.

1. 2 நூலகத்தில் உள்ள நூல்கள் உட்பட நூலகத்தின் வாசிப்புச் சாதனங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நூலகத்தின் வசதிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

உ+ம்: புத்தக சந்தை/ கண்காட்சி நடாத்துதல், வருடாந்த புத்தக அன்பளிப்பு தினங்களை நடைமுறைப்படுத்துதல்

1.3 பாடசாலை மாணவர்களிடையே நூலக பாவணையை மேம்படுத்துதல் மற்றும் மாணவர்கள் வாசிப்பதற்கான ஆர்வத்தை அதிகரிப்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

உ+ம்-

- வாசிப்பின் பெறுமதி தொடர்பில் விழிப்புணர்வூட்டுவதற்கான விரிவுரைகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள், உரைகள், விமர்சன ரீதியான வினா விடை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

- பாடசாலையின் நூல்களின் சேகரிப்புக்களை, மற்றும் அவற்றில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் மற்றும் விடயங்களை வினைத்திறன் மிக்க முறையில் அனுகுவதற்கான செயன்முறைகள் தொடர்பில் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- மாணவர்களை புத்தகம் வாசிக்க ஊக்குவிக்கும் வகையிலான சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் வாக்கியங்களை காட்சிப்படுத்துதல்
- நூல்களை வாசிப்பதனூடாக வாழ்க்கையை வெற்றிகொள்ளல் (புத்தகம் வாசிப்போம்- உலகை வெல்வோம்) எனும் தொனிப் பொருளின் கீழ் வாழ்க்கையை வெற்றிகொண்ட மதிப்பு மிக்க நபர்களது சுயசரிதைகள் மற்றும் வாழ்க்கைக் கதைகளை சேகரித்தல், காட்சிப்படுத்துதல் மற்றும் அந் நபர்கள் தொடர்பான விடயங்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் (பாடசாலை நூலகத்தின் சேகரிப்பு சார்ந்து அல்லது ஏனைய ஆதாரங்களூடாக)
- வாசிப்புத் திறமை மற்றும் செயன்முறைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மாற்றீட்டு வாசிப்பு சாதனங்களை அறிமுகம் செய்வதனூடாக தகவல் அறிவினை விருத்தி செய்தல்.

  (உ+ம்: திரைப் படங்களை வாசித்தல், தொலைக் காட்சி நாடகங்களை வாசித்தல், சுற்றாடல் வாசிப்பு போன்றனவற்றினூடாக சிறந்த மாற்றீட்டு வாசிப்புச் சாதனங்களை அறிமுகம் செய்தல், நூல்களை அடிப்படையாக கொண்ட மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்)
- பிரதேசத்தில் அங்கீகாரம் பெற்ற/ பிரசித்தி பெற்ற எழுத்தாளர் அல்லது கீர்த்தி மிக்க இலக்கியவாதி ஒருவரைக் கலந்துகொள்ளச் செய்து இலக்கிய ஆய்வு நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல்.
- பாடசாலையினுள் வாசிப்பு முகாம்கள், வாசிப்புக் கழகங்கள், பாடசாலை நூலக சங்கம் ஆகியவற்றை ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்துதல்.
- பாடசாலை வளாகத்தினுள் மற்றும் வகுப்பறையினுள் நடமாடும் புத்தகப் பைகள்/ புத்தக கூடைகள், புத்தக மூலைகளை உருவாக்குதல் மற்றும் பாடசாலை வாசிப்பு வாரத்தை நடாத்துதல்.
- 2025 ம் ஆண்டில் பாடசாலையின் சிறந்த வாசிப்பவரை நூலக பாவணை சார்ந்து தெரிவு செய்து கௌரவித்தல்.

க.கொ- தேசிய வாசிப்பு மாதத்தில் நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரியதாக பாடசாலை நூலக வாரம் மற்றும் பாடசாலை நூலக தினத்தை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

## 02. பாடசாலை நூலக வாரம் மற்றும் பாடசாலை நூலக தினம்

பாடசாலை நூலக வாரம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தின் (வாசிப்பு மாதத்தின்) இறுதி வாரம் அனுஷ்டிக்கப்படுவதுடன், அவ் வாரத்தின் திங்கட் கிழமையன்று பாடசாலை நூலக தினமாக தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, அதற்கமைய **2025ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ம் திகதி முதல் ஒக்டோபர் 31ம் திகதி வெள்ளிக் கிழமை** வரை *05* நாட்கள் பாடசாலை நூலக வாரத்திற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும்.

இத்துடன் இணைந்ததாக, நூலக பாவணையினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலையினுள் நடைமுறைப்படுத்துவதனூடாக அதனை மாணவர்களிடையே பேசுபொருளாக்கு, மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதனூடாக கற்றல் திறன்களை விருத்தி செய்வதுன் இதன் குறிக்கோளாகும்.

அதற்கமைய கீழே தரப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் தேசிய வாசிப்பு மாதத்தில் பாடசாலை நூலக வாரம் மற்றும் பாடசாலை நூலக தினத்திற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலையினுள் நடைமுறைப்படுத்துவது அதிபரின் பொறுப்பாகும். இதன் போது பாடசாலை நூலகக்குழுவின் மேற்பார்வையின் கீழ் பாடசாலையின் நூலகங்களை மையப்படுத்தி இந் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குசெய்யப்படல் வேண்டும்.

## 2.1. பாடசாலை நூலக வாரம் மற்றும் பாடசாலை நூலக தின நிகழ்ச்சித்திட்டங்களின் ஒழுங்குவரிசை (மாதிரிக் கட்டமைப்பு)

தங்களது பாடசாலைக்குப் பொருத்தமான முறையில் இந் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வது பொருத்தமாகும்.

### 2.1.1. 2025.10.27 ம் திகதி (முதலாம் நாள்)

- பாடசாலை வாரத்திற்குரிய தொனிப்பொருளை அச்சிட்டு பதாகை ஒன்றைக் காட்சிப்படுத்துதல்.

  2025ம் ஆண்டிற்கான தொனிப் பொருள் "புத்தகம் வாசிப்போம் – உலகை வெல்வோம்"

பாடசாலைக்குப் பொருத்தமான வகையில் தொனிப் பொருளுக்கான இலச்சினை ஒன்றை வடிவமைத்தல் - உதா



(பதாகை மற்றும் சுவரொட்டி போன்றவற்றை காட்சிப்படுத்தும் போது இந்த இலச்சினை உள்ளடக்க முடியும்)

இந்த பதாகையினை ஆகக் குறைந்தது 4 அடி நீளம் மற்றும் 2 அடி அகலம் கொண்டதாக தயாரித்துக் கொள்வதனூடாக மாணவர்களது விசேட கவனம் இதன் மீது செலுத்தப்பட முடியும். இருப்பினும் பாடசாலைக்கு பொருத்தமான வகையில் பதாகையின் அளவினை தீர்மானித்துக் கொள்ள முடியும்.

பதாகைக்கான மாதிரிக் கட்டமைப்பு



"புத்தகம் வாசிப்போம் – உலகை வெல்வோம்"

பாடசாலை நூலக வாரம் (2025 ஒக்டோபர் 27 முதல் 31 வரை)

.................................................................................... கல்லூரி

- பாடசாலையின் காலைக் கூட்டத்தின் போது "நூலகப் பாவனையின் முக்கியத்துவம்" தொடர்பில் உரை நிகழ்த்துதல் மற்றும் நூலக வாரம் மற்றும் தினம் ஆரம்பிப்பதாக மாணவர்களை அறிவுறுத்துதல்.
- பாடசாலை நூலக வாரத்திற்காக (2025ம் ஆண்டு) வழங்கப்பட்டுள்ள தொனிப் பொருளின் கீழ் ("புத்தகம் வாசிப்போம் - உலகை வெல்வோம்") விரிவுரைகள், நாடகங்கள், சித்திரங்கள் மற்றும் சுவரொட்டிகள் அல்லது வேறு ஆக்கபூர்வமான அங்கங்களுடன் கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

### 2.1.2 2025.10.28ம் திகதி (இரண்டாம் நாள்)

நூலகத்தின் உட்புறம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை சுத்தப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சூழல் அலங்கரிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

2.1.3 **2025.10.29ம் திகதி (மூன்றாம் நாள்)**

நூலகத்தின் புத்தக இருப்புக்களை முறையாக ஒழுங்குபடுத்துதல் (ஒழுங்குபடுத்தி அடுக்குதல், சேதமடைந்த புத்தகங்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் மீளக் கட்டமைத்தல் போன்ற செயற்பாடுகள்)

2.1.4 **2025.10.30ம் திகதி (நான்காம் நாள்)**

நூலகத்தில் உள்ள புத்தகங்களின் சேகரிப்பை விருத்தி செய்வதற்காக புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல்.

(உ+ம்: பிறந்த நாள் அன்பளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், புது வருட அன்பளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், புத்தக பொஹொசா நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன)

2.1.5 **2025.10.31ம் திகதி (ஐந்தாம் நாள்)**

2025ம் ஆண்டில் பாடசாலை நூலகங்களைப் பயன்படுத்தும் மாணவர்களிலிருந்து சிறந்த வாசிப்பாளர்களைத் தெரிவு செய்து அவர்களை கௌரவித்தல், மாணவர்களிடையே வாசிப்பை மேம்படுத்துதல் மற்றும் வாசிப்பதற்கு ஊக்குவிக்கும் வகையில் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை இதன் கீழ் நடைமுறைப்படுத்த வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய தங்களது தங்களது பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதனை கோவைப்படுத்தி நூலகத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதுடன், உள்ளக மற்றும் வெளிவாரி மேற்பார்வைகளின் போதும், வேறு தேவையான சந்தர்ப்பங்களின் போதும் அவற்றை முன்னிலைப்படுத்த வேண்டும். தேசிய பாடசாலை எனின், அவ் அறிக்கையின் பிரதியொன்றை கல்விப் பணிப்பாளர், பாடசாலை நூலக அபிவிருத்திக் கிளை, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்படுமாறு தங்களுக்கு தயவுடன் அறியத் தருவதுடன், அதன் மூலம் பாடசாலை மாணவர்களை நூலகப் பாவனை மற்றும் சிறந்த வாசிப்பு சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிப்பதற்காக தங்களால் எடுக்கப்படும் சகல முயற்சிகளையும் பெரிதும் மதிக்கின்றேன்.

(இவ் ஆலோசனைகள் மற்றும் கடிதம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் www.gov.moe.lk எனும் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

நாலக களுவெவ

செயலாளர்